# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS.. No. 106/2013 நாள்:20.09.2021

Name: கோபால்சாமி(PW1)

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

எனக்கு படிக்க தெரியும். தாவா சொத்து குறித்து கிரையத்திற்கு முன்பு வில்லங்க சான்று போட்டு பார்த்தேனா என்றால், பார்க்கவில்லை. தாவா சொத்து முழுவதிற்கும் மூல பத்திரம் உள்ளதா? என்று வாங்கி பார்த்தேனா என்றால், பார்த்தேன். அசல் பத்திரத்தை பார்த்தேனா? என்றால், பார்த்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அது என் கைவசம் உள்ளதா? என்றால், இல்லை. தாவா சொத்து முழுதும் சித்தாயம்மாள் என்பவர் பெயரில் கிரைய பத்திரம் இருந்ததை நான் பார்த்தேன். சர்வே எண்159/3 ல் பேர் பாதியும், ச.எண். 159/6 ல் பேர் பாதியும் தான் நான் தாக்கல் செய்த பத்திரத்தில் உள்ளது என்றும், ஆனால் 4 சர்வே எண்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ-10 ல் 2 சர்வே எண்கள் தான் உள்ளது என்றால், அது தவறு. நான் 4 சர்வே எண்கள் உள்ள பத்திரத்தை தான் நான் பார்த்தேன். அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். சித்தாயம்மாள் 2 சர்வே எண்கள் தான் கிரையம் பெற்றுள்ளார் எனவும், நான் 4 சர்வே எண்களை கிரையம் பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. பட்டா எண்.284 ல் சித்தாயம்மாள் பெயரும், மாரியம்மாள் பெயரும் கூட்டாக உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ன் பின்னால் உள்ள பட்டா எண்.365 ல் சீத்தம்மாள் மற்றும் மாரியம்மாள் என்பவர் பெயரில் உள்ளது என்றால், சரிதான். 13.10.2008 ல் இதே சொத்து தொடர்பாக சீரங்காயி பெயரில் ஒரு கிரைய பத்திரம் உள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து ச.எண்.159/3C முழுவதையும் சீரங்காயி என்பவர் 13.10.2008 ல் கிரையம் பெற்றது தெரிந்தும் நான் 11.12.2010 ல் கிரையம் பெற்றதால் அது செல்லாது என்றால், சரியல்ல. சீரங்காயி பெயரில் கிரையம் உள்ள நிலையில் அந்த சொத்தை நான் வேறு நபரிடம் பெற்றிருப்பதால் அது செல்லத்தக்கதல்ல. அந்த கிரையத்தின் அடிப்படையில் எனக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்தில் நான் எப்போதும் அனுபவத்தில் இல்லை என்றால், சரியல்ல. அனுபவத்தில் உள்ளேன். நான் பதிலுரை தாக்கல் செய்த பின்பு தான் சீரங்காயி பெயரில் கிரையம் உள்ள விவரம் எனக்கு தெரியும். அந்த விவரம் தெரிந்த பின்பும் அவரை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். சீரங்காயி மீது நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். ச.எண்.159/3E சீரங்கன் என்பவர் செங்கல் சூலை நடத்தி வருகிறார் என்றால், சரிதான். நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லாததால் நீதிமன்ற கட்டணம் 37(2)ன் கீழ் இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல. நான் பஞ்சாயத்தார் மூலம் பிரதிவாதிகளிடம் பாகம் கேட்டதாக கூறியுள்ளதில் அந்த விவரத்தை வழக்குரையிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால், சரியல்ல. நான் பஞ்சாயத்தார் மூலம் பாகம் கேட்கவில்லை என்றும், அதனால் தான் தேதி, மாதத்தினை வழக்குரையிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றும், நான் சொல்வது போல கேட்டிருந்தால் அந்த விவரத்தை வழக்குரையிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியிருப்பேன் என்றால், சரியல்ல. என்னுடன் கபடி மாதையன் என்பவரும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால், சரிதான்.

தாவாவிற்கு முன்பு நான் எந்த வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால், திரு.நந்தகோபால் என்பவர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். மாதையனின் துர்போதனையால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 9.4.2008 ம் தேதி ச.எண்கள். 159/3E மற்றும் 159/2C சொத்துகளை 8 ம் பிரதிவாதி மாரியம்மாளுக்கு 1,2 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல. இந்த கிரையமும் நான் கிரையம் பெற்ற தேதியிலேயே எனக்கு தெரியும் என்றும், தெரிந்தே நான் அவ்வாறு பொய்யாக கிரையம் செய்துள்ளேன் என்றால், தவறு. சித்தாயம்மாளுக்கு 4 மகன்கள், 1 மகள் உள்ளார்கள். வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி எங்களுக்கும், எங்களது சகோதரர்களுக்கும் இடையில் பஞ்சாயத்து மூலம் பாத்தியப்பட்டு என்றிருந்த போதிலும், அத்து கண்டு அளந்து பாகக்கரால் ஏற்படவில்லை. சக்குபந்தி கண்டு அளந்து நாங்கள் வாங்கவில்லை. வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி எங்களுக்கும், எங்களது சகோதரர்களுக்கும் என்று தான் உள்ளது எனவும், சகோதரிகளுக்கு இடையே பாகம் பிரிந்ததாக இல்லை என்றால், சரிதான். சகோதரர்களுக்கிடையே பாகம் பிரிந்திருந்தால் 4 ல் 1 பங்கு தான் பிரிந்திருக்கம் எனவும், 5 ல் 1 பாகம் பிரிந்திருக்காது எனவும், நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சர்வே எண்ணில் எனக்கு விற்றவர்களுக்கு பாகம் பிரியவில்லை என்றால், சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்தவருக்கு ச.எண்.179/3A, 3B, 187/1R மற்றும் 180/36 ல் 30 செண்ட் தான் பிரிந்தது என்றும், தாவா சொத்தில் பிரியவில்லை என்றும் சொன்னால், சரியல்ல. எனக்கு விற்ற கந்தப்பன் என்பவர் ச.எண்.179/3A மற்றும் 187/1R ன் முழு விஸ்தீரனத்தையும் 22.9.2008 ல் ரங்கன் மகன் ஸ்டாலினுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால், தெரியாது. 180/36 ல் கந்தப்பனுக்கு பிரிந்த 30 சென்ட்டையும் 14.02.1992 ம் தேதி சின்னபையனுக்கு விற்றுவிட்டார் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் பதிலுரையில் சொல்லியபடி பாகம் பிரிந்தால் தான் எனக்கு விற்ற கந்தப்பன் என்பவர் 179/3A மற்றும் 187/1R ஆகியவற்றின் முழு விஸ்தீரனத்தையும் கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும், நீங்கள் சொல்வது போல பாகம் ஆகியிருந்தால் 5 ல் 1 பங்கு தான் விற்றிருப்பார் என்றால், சரியல்ல. ச.எண்.159/3C ல் 43 3/4 சென்ட் நிலத்தை 9 ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும், நான் அனுபவித்து வரவில்லை என்றால், சரியல்ல. 2008 ல் ஏற்பட்ட கிரையத்தினை பற்றி எனக்கு தெரிந்திருந்தும் வா.சா.ஆ-1 பத்திரத்தை உருவாக்கியுள்ளேன் என்றால், சரியல்ல. 9.4.2008 மற்றும் 13.1.2013 ம் தேதியிட்ட பத்திரமும் பொய்யானது என்றால், சரியல்ல. மேற்படி பத்திரங்கள் இரண்டுமே உண்மையானது மற்றும் நடைமுறையில் உள்ள பத்திரங்கள் என்றால், சரியல்ல. 09.04.2008 தேதியிட்ட பத்திரம் வா.சா.ஆ-1 க்கு முந்தைய பத்திரம் என்பதால் அது என்னை கடடுப்படுத்தும் என்றால், சரியல்ல. மேற்படி பத்திரங்கள் பதிலுரை தாக்கல் செய்யப்பட்ட பின்பு தான் எனக்கு தெரியும் என்பது பொய் என்றும், கிரையத்திற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால், சரியல்ல. எனது கூட்டு அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்தார்கள் என்பது பொய் என்றும், நான் கூட்டு சுவாதீனத்திலேயே இல்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 க்கு முன்பே பத்திரம் இருப்பது தெரிந்தும் நான் பத்திரம் உருவாக்கியிருப்பதால் எனக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்து முழுவதும் சித்தாயம்மாளுக்கு

பாத்தியப்பட்டதல்ல என்பதால் எனக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நான் கேட்ட விகிதாசாரம் சரியானதல்ல என்றும், இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், சொன்னால், சரியல்ல.

Sd/-Gopalsamy,

Sd/-S.Uma Maheswari,
Sub Judge, Sankari.